ஆண்டுதான் தொடங்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 202, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

202—

நடமாடும் நியாய விலைக் கடை

***4606—திரு. பி.எல். சுந்தரம்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் மலைப் பகுதிகளில் நடமாடும் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் மலைப் பகுதியில் உள்ள 198 கிராமங்களில் வாழும் 23,978 குடும்ப அட்டைதாரர்களுக்கு 9 கூட்டுறவு நிறுவனங்களின்மூலமும், 26 முழுநேர நியாய விலைக் கடைகள் மற்றும் 36 பகுதிநேர நியாய விலைக் கடைகள், ஆக மொத்தம் 62 நியாய விலைக் கடைகள்மூலமும் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள, தாளவாடி மலைப் பகுதியிலுள்ள EP *071 கோர்மாளம் நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்ட* J.R.S. *புரம் மற்றும் காணக்கரை ஆகிய இரண்டு மலைக் கிராமங்களுக்கு நகரும் நியாய விலைக் கடைமூலம் அத்தியாவசியப் பொருட்கள் பிரதிவாரம் செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் வழங்கப்பட்டு*

2013 ஏப்ரல் 10]

வருகின்றன. இதுதவிர, EP 072 தேவர்நத்தம் முழுநேரக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ள மேல்மாவல்லம் மற்றும் கீழ்மாவல்லம் மற்றும் EZ 078 கோட்டாடை பகுதிநேரக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ள ஒசட்டி மற்றும் குளியாட ஆகிய நான்கு மலைக் கிராமங்களுக்கு நகரும் நியாய விலைக் கடைகள்மூலம் அத்தியாவசியப் பொருட்களை வழங்க ஈரோடு மாவட்ட ஆட்சியரின் அனுமதி கோரப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன் நகரும் நியாய விலைக் கடைகள்மூலம் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படும்.

மேலும், 2013–2014 ஆம் நிதியாண்டில் 100 நகரும் நியாய விலைக் கடைகள் அமைக்க இந்திய திருநாட்டின் வாழும் மனித தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். இதைத் தொடர்ந்து சத்தியமங்கலம் மலைப் பகுதியில், சாலை வசதியுள்ள மலைக் கிராமங்களுக்கு நகரும் நியாய விலைக் கடைகள்மூலம் அத்தியாவசியப் பொருட்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள்.

திரு. பி.எல். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் நீண்டதொரு விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மலைப் பகுதிகளில் உள்ள ரேஷன் கடைகளுக்கு மக்கள் நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டியிருக்கிறது. அரசு வழங்கும் விலையில்லா அரிசியை வாங்க மலைவாழ் மக்கள் அதிக செலவு செய்ய வேண்டியிருக்கிறது. விலையில்லா அரிசியை செலவில்லாமல் வாங்க இந்த அரசு எடுத்துவரும் நடவடிக்கைக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடமாடும் நியாய விலைக் கடைகள் செயல்படும்போது நடைமுறையில் சிக்கல் ஏற்படுகிறது. ஒரே வாகனத்தில் மண்ணெண்ணெய் பேரல்களையும், இதர ரேஷன் பொருட்களையும் கொண்டு செல்லும்போது, மண்ணெண்ணெய் கசிவினால் ரேஷன் பொருட்களை மக்கள் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. அரசு 100 நடமாடும்

புதிய ரேஷன் கடைகளை அமைக்கும்போது இத்தகைய பிரச்சினையில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று அரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஒரு சூழ்நிலை ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான், ஏற்கெனவே 10 வாகனங்கள் வாங்கப்பட்டிருக்கின்றன. அந்த வாகனங்களை எல்லாம் வேன் மாதிரி இப்போது பயன்படுத்தி வருகிறார்கள். நடமாடும் நியாய விலைக் கடைளில்தான் இத்தகைய பிரச்சினைகள் வருகின்றன. இனிமேல் இவ்வாறு நிகழாத அளவிற்கு, மாண்புமிகு அம்மா அவர்கள் சிறப்பாக வாகனங்களை வடிவமைக்க தீர்க்கமாக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். மண்ணெண்ணெய் கசிவு ரேஷன் உணவுப் பொருட்களில் படாத அளவிற்கு, அந்த வாடையே வராத அளவிற்கு அந்த வாகனத்தைச் சிறப்பாக உருவாக்கியிருக்கிறார்கள். அதிவிரைவிலே, தங்கத் தாய் மாண்புமிகு புரட்சித் தாய் அவர்கள் தங்களின் திருக்கரங்களால் மாடல் வேனை முதன்முதலில் தொடங்கி வைக்கவிருக்கிறார்கள். இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழகத்திலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான், நகரும் நியாய விலைக் கடைகள் மிகச் சிறப்பான முறையில் இயங்குகின்றன. அண்டை மாநிலங்களுக்கு இது ஓர் எடுத்துக்காட்டாகத் திகழப்போகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள்.

திரு. பி.எல். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக நடவடிக்கை எடுத்தால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 203, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.